## 5

# ஒருமித்து இருக்கும் ஒரு வாழ்வு

## (நடபடிகள் 2:22-47)

*மறு உருவாக்கமான வாழ்வு என்பது உள்ளூர் சபை ஒன்றில் வாழப்படும் வாழ்வாக உள்ளது ...*

*எரிகோ செல்லும் சாலையில்*
*இருவருக்கு மாத்திரம் இடமுண்டு,*
*அதிகமோ அல்லது குறைவோ அல்ல,*
*இயேசுவும் நீங்களும் மட்டுமே.*

இந்தப் பாடல் ஒரு புனைவுக் கருத்தைக் கொண்டிருக்கையில், இது சரியற்றதாவும் உள்ளது. கிறிஸ்து எல்லாரையும் ஐக்கியத்திற்குள் அழைக்கிறார். மற்றும் இது தவறாக வழிநடத்துவதாக இருக்கலாம். நாம் சபையின் ஒரு பாக மாக இருப்பது அவசியமில்லை என்று நினைக்கும் அளவுக்கு, கிறிஸ்துவுடனான நமது சொந்த உறவை வலியுறுத்தலாம். யாரேனும் ஒருவர் பின்வருமாறு கேட்கலாம்: "நான் ஏன் ஆராதனைக்கு வரவேண்டும்? கிறிஸ்துவுடன் நெருக்க மாக நிலைத்திருத்தல் என்பதே நான் செய்ய வேண்டிய யாவுமாக உள்ளது. நான் கர்த்தரை, சபைக் கட்டிடத்தில் ஆராதிப்பது போன்றே நதிக்கரையின் மீதுகூட ஆராதிக்க முடியும்."

ஆனால் கிறிஸ்தவம் என்பது ஒரு தனிமையான வாழ்வாக இருக்க வேண்டுமென்பதில்லை என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது. அது நமது கர்த்தருடைய சபையில் ஒருமித்து இருத்தலின் வாழ்வாக இருக்க வேண்டும் என்று நோக்கங்கொண்டது. சபை என்பது தேவனுடைய நித்திய நோக்கம் மற்றும் திட்டம் ஆகியவற்றின் பகுதியாக உள்ளது என்ற உண்மையே (எபேசியர் 3:10, 11), தேவன் தமது பிள்ளைகள் என்ற வகையில் கிறிஸ்தவர்கள் தாங்களாகவே இருந்துகொள்ள வேண்டும் என்று விருப்பம் கொண்டிருக்க வில்லை என்று நமக்குக் கூறுகிறது. அவர்கள் சபையின் அங்கமாக இருக்க வேண்டும் என்றே அவர் அர்த்தப்படுத்தினார் - மற்றும் "சபை" என்பதற்காக கிரேக்க வார்த்தை ஒரு மக்கள் கூட்டம், ஒரு சபைக்குழுமம் என்றே அர்த்தப்படுகிறது - அங்கு அவர்கள் மற்ற கிறிஸ்தவர்களுடன் சேர்ந்து வாழ்வார்கள், அவர்கள் யாவரும் ஒருமித்து இருந்து, அவரது சித்தத்தைச் செய்யப் பிரயாசப்படுவார்கள். *கிறிஸ்தவராக இருப்பதற்கு சபை அவசிய மில்லை என்று கூறும் ஒருவர், தேவனுடைய தீர்ப்பை/முடிவைக் குறித்துக் கேள்விகேட்கிறார்!*

நடபடிகள் 2:22-47 என்பது, அந்த ஒருமித்து இருத்தலைச் சித்தரிக்கும் ஒரு புதிய ஏற்பாட்டின் ஒரு வசனப் பகுதியாக உள்ளது.

# அந்த ஒருமித்து இருத்தலுக்கான அடிப்படை

*நடபடிகள் 2ம் அதிகாரமானது, இயேசு வாக்களித்திருந்தபடியே பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களின் மீது எவ்வாறு வந்து இறங்கினார் என்று கூறுகிறது. பரிசுத்த ஆவியானவரின் பௌதீக வெளிப்பாடுகள் ஒரு கூட்டம் கூடுவதற்குக் காரணமாயின. ஆனால் அங்கிருந்தவர்களில் சிலர் கேலிசெய்தனர். பின்பு பேதுரு எழுந்து நின்று, அங்கு நடந்துகொண்டிருந்த விஷயம் மதுமயக்கத்தின் விளைவாக இருக்கவில்லை என்று வாதிட்டார்; மாறாக அது, யோவேல் தீர்க்கதரிசி முன்னுரைத்து இருந்த விஷயமாயிருந்தது. ஆவியானவரின் இந்த வெளிப்பாடுகளுடன் தேவன் பரிசுத்த ஆவியானவரை அனுப்பியிருந்தார். பின்பு பேதுரு பிரசங்கிக்கத் தொடங்கினார் (நடபடிகள் 2:22-36).*

*பேதுரு, தமது பிரசங்கத்தின் முதல் வார்த்தைகளிலேயே தமது ஆய்வுக்கருத்தை உரைக்கிறார்: "நசரேயனாகிய இயேசு." தேவனுடைய வல்லமையினால் இயேசு அற்புதங்களை நிகழ்த்தினார் என்று பேதுரு கூறுகிறார் (வசனம் 22); அதாவது, அவர் [இயேசு] உரைத்ததைக் கேட்டுக்கொண்டிருந்த மக்களால் அவர் கொல்லப்பட்டிருந்தார் (வசனங்கள் 23, 36); வேதவாக்கியங்கள் முன்னுரைத்திருந்தபடியே அவர் மரித்தோரில் இருந்து எழுப்பப்பட்டிருந்தார், உயிர்த்தெழுதலுக்கு அப்போஸ்தலர்கள் சாட்சிகளாக இருந்தனர் (வசனங்கள் 24-32); மற்றும், அவர் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கப்பட்டு இப்போது பரலோகத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கிறர் (வசனங்கள் 33-36).*

*அந்தப் பிரசங்கத்தின் விளைவு நடபடிகள் 2:37ல் தரப்பட்டுள்ளது: "இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: 'சகோதரரே,' நாங்கள் என்னசெய்யவேண்டும் என்றார்கள்." பேதுரு கூறியிருந்ததை - அதாவது இயேசு உயிர்ப்பிக்கப்பட்டு, பரலோகத்தில் மகிமைப்படுத்தப்பட்டிருந்தார் மற்றும் அவர் ஆண்டவராகவும் கிறிஸ்துவாகவும் இருக்கிறார் என்பதை அவர்கள் விசுவாசித்தனர் என்பது தெளிவு.*

*பின்பு நாம் பின்வருமாறு வாசிக்கிறோம்: " 'பேதுரு அவர்களை நோக்கி, நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின்* நாமத்தினாலே *ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்' " என்று கூறினார் (நடபடிகள் 2:38). இவ்வாறாக, இயேசுவில் விசுவாசம் கொண்டிருந்த மக்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கட்டளையிடப்பட்டனர். கிறிஸ்தவராவதற்கு ஒரு நபர், இயேசுவில் விசுவாசம் கொண்டு, தமது பாவங்களுக்கு மனந்திரும்பி, மற்றும் பாவமன்னிப்*பிற்கென்று* *ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.*

*அடுத்து நாம், பேதுருவின் கூற்றிற்குக் கூட்டத்தாரின் பதில்செயலைப் பற்றி வாசிக்கிறோம் (நடபடிகள் 2:39-41): "அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்." ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பாவமன்னிப்பையும் பரிசுத்த ஆவியானவரையும் பெற்றுக் கொண்டனர் என்று நாம் நிச்சயமாய்க் கூறமுடியும்! (நடபடிகள் 2:38). ஆனால் வேறொன்றும் கூட நடந்தது:*

*“அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்” (நடபடிகள் 2:41). எதற்குள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்? சபைக்குள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்! நடபடிகள் 2:47ம் வசனம், இந்தக் குழுவுடன் “இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார்” என்று கூறுகிறது. நடபடிகள் 2:47ல்* [KJV] *வேதாகமம், “சபை” என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறது, இது மூலபாஷை வேதாகமத்தில் இல்லை, ஆனால் அந்தக் கருத்து உள்ளது. இதே குழுவைப்பற்றி 41 மற்றும் 47ம் வசனங்களில் பேசப்படுகிறது, மற்றும் அந்தக் குழு என்பது சபையாக இருக்க வேண்டும். உண்மையில், இந்த நாளில்தான் சபை தனது தொடக்கத்தைக் கொண்டிருந்தது. (காண்க நடபடிகள் 11:15.)*

*நமது ஒருமித்து இருத்தலுக்கு இவையாவும் செய்ய வேண்டியுள்ளவை என்ன? ஒவ்வொன்றும்! நாமும் இதேபோன்றுதான் ஆகிறோம். கிறிஸ்தவர்கள்! இதேவழியில்தான் நாமும் கிறிஸ்தவர்கள் ஆகிறோம்! அதே சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டதை நாம் கேள்விப்பட்டோம்! அதே விஷயத்தை நாம் விசுவாசித்தோம்! அதே கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படிந்தோம்: மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்! அதேவழியில், அதே காரணத்திற்காகத்தான் நாம் யாவரும் ஞானஸ்நானம் பெற்றோம், இதைப் பவுல் “ஒரே ஞானஸ்நானம்” என்று அழைக்கிறார் (எபேசியர் 4:5). மற்றும் நாம் யாவரும் அதே சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டோம். பவுல் இதைப் பின்வருமாறு உரைக்கிறார்: “நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, …” (1 கொரிந்தியர் 12:13). வேதாகமத்தின் படியான ஒன்றுகூடுதல், வேதாகமரீதியான ஒருமைப்பாடு என்பது அதே விஷயங்களை நாம் விசுவாசித்தல், அதே ஞானஸ்நானத்திற்குக் கீழ்ப்படிதல், மற்றும் அதே சபையில் சேர்த்துக்கொள்ளப்படுதல் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது! நாம் புதிய ஏற்பாட்டில் தரப்பட்டுள்ள மாதிரியின்படி கிறிஸ்தவர்கள் ஆகாதவரையிலும், மற்றும் நாம் ஒரே சரீரம் அல்லது சபைக்குள் (கொலோசெயர் 1:18) சேர்த்துக்கொள்ளப்பட்டிராதவரையிலும், புதிய ஏற்பாடு பேசுகிற அந்த ஒருமித்து இருத்தலை நம்மால் அனுபவிக்க இயலாது.*

## அந்த ஒருமித்து இருத்தலின் பண்புகள்

*அந்த முதல் சபையின் வாழ்வைப்பற்றி நடபடிகள் 2ம் அதிகாரம் விவரிக்கிறது (நடபடிகள் 2:42-47). ஒருவேளை இவ்வசனப் பகுதியின் ஆய்வுக்கருத்து 44ம் வசனத்தில் காணப்படுகிறது: “விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து …” அவர்கள் எதில் ஒருமித்திருந்தனர்?*

### அப்போஸ்தலருடைய உபதேசத்திற்குத் தங்களை அர்ப்பணித்தலில் ஒருமித்திருந்தனர்

*நடபடிகள் 2:42ம் வசனம், சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தவர்கள், “அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்” என்று கூறுகிறது. அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய்த் தரித்திருத்தல் என்பது எதை உள்ளடக்கியிருக்கிறது?*

*அது அப்போஸ்தலர்கள் தேவனுடைய வசனத்தைப் பிரசங்கித்ததைக் காதுகொடுத்துக்கேட்டதை உள்ளடக்கி இருக்க வேண்டும். அந்த முதல் கிறிஸ்தவர்கள், தங்கள் மத்தியில் உயிருடன் இருந்த அப்போஸ்தலர்களுக்கு இயேசு போதித்திருந்தவற்றைத் தங்களுக்கு அவர்கள் போதிப்பதைக் கேட்கும் சிலாக்கியத்தைக் கொண்டிருந்தனர் (மத்தேயு 28:18-20). அவர்கள் அன்றாடம் ஆவலுடன் அப்போஸ்தலர்களைச் சுற்றிக்கூடி, இயேசுவைப் பற்றி அதிகமாகக் கற்றுக்கொள்ள நாடியதைக் கற்பனை செய்து பாருங்கள்.*

*அதுவே தேவையான எல்லாமுமாக இருக்கவில்லை. அப்போஸ்தலருடைய உபதேசத்தின் மீதான அவர்களின் அக்கறையானது அனேகமாக, வேதவசனங்களை அவர்கள் சொந்தமாகப் படிப்பதை உள்ளடக்கி இருக்கலாம். இயேசு, பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றி இருந்தார் என்று அப்போஸ்தலர்கள் இடைவிடாது பிரசங்கித்தனர். இவர்கள், பழைய ஏற்பாட்டுடன் நன்கு பழக்கமாகியிருந்த யூதர்களாயிருந்தனர் மற்றும் பிற்பாடு பெரேயாவில் இருந்தவர்கள் செய்ததைச் செய்யக் கூடியவர்களாக இருந்தனர்: "காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்தல்" (நடபடிகள் 17:11). பழைய ஏற்பாட்டுச் சுருள்களை அவர்கள், மணிக்குப் பின் மணியாக ஆழ்ந்து படித்து, எழுதப்பட்டிருந்தவற்றுடன் தாங்கள் கேள்விப்பட்டிருந்தவற்றை ஒப்பிட்டுபார்ப்பதை, மீண்டுமாக நீங்கள் கற்பனை செய்ய முடியும். மற்றும், உண்மையில் இயேசுவே வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருந்த மேசியாவாக இருந்தார் என்பது அவர்களுக்கு உறுதிப்படுத்தப்பட்ட போது, அவர்கள் மகிழ்வடைந்ததை நீங்கள் கற்பனை செய்ய முடியும்!*

*அதுவும்கூட எல்லாமுமாக இருக்கவில்லை. அப்போஸ்தலருடைய உபதேசங்களுக்கு அவர்கள் தங்களை அர்ப்பணித்திருந்த நிலையானது, அப்போஸ்தலருடைய உபதேசத்தைப் பின்பற்றுவதற்கான அவர்களின் தீர்மானத்தை நிச்சயமாகவே உள்ளடக்கி இருந்தது. அப்போஸ்தலர்கள் மூலமாகக் கிறிஸ்து பேசிக்கொண்டிருந்தார் என்று அவர்கள் அறிந்தனர்; இவ்வாறாக, அப்போல்தலர்களுடைய வார்த்தைகள் கிறிஸ்துவினுடைய வார்த்தைகள் போலவே அதிகாரத்துவம் உடையவைகளாயிருந்தன. ஆகவே கற்றுக்கொள்வதற்காக மட்டுமின்றி, தாங்கள் செய்ய வேண்டும் என்று கர்த்தர் விரும்புவது என்ன என்பதைக் கண்டறிவதற்காகவும், அப்போஸ்தலர்கள் கூறியதை, அவர்கள் கவனித்துக் கேட்டனர்!*

*அவ்வாறே இன்றைய நாட்களிலும் சபையில் ஒருமித்து இருத்தலுக்கு, அப்போஸ்தலருடைய உபதேசத்திற்கு நம்மையே அர்ப்பணித்தல் அவசியமாக உள்ளது.*

*நாம் அந்த உபதேசத்திற்கு நம்மை அர்ப்பணித்தவர்களாக இருக்க வேண்டுமென்றால், அப்போஸ்தலர்கள் போதிப்பது என்ன என்பதைக் கேட்பதற்கு நாம் ஆவல் கொண்டவர்களாக இருக்க வேண்டும். ஒரு கருத்தில், முதல் சபையைப் போலவே, இன்றைய நாட்களில் நாமும் உயிருடன் உள்ள அப்போஸ்தலர்களைக் கொண்டிருக்கிறோம்! அதாவது புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டுள்ள "என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய" (1 பேதுரு 1:23) அவர்களின் வார்த்தைகளைக் கொண்டிருப்பதில், அவர்களையே நம்முடன் கொண்டுள்ளோம். முதல் கிறிஸ்தவர்கள் செய்ததைப்*

*போலவே நாமும், அந்த வசனம் பிரசங்கிக்கப்படுதலை எதிர்ப்பார்ப்புடனும் ஆவலுடனும் கவனிக்க வேண்டாமா? அந்த வசனம் போதிக்கப்படுகிற அல்லது பிரசங்கிக்கப்படுகிறபோது - எல்லாம், அது ஞாயிற்றுக்கிழமை காலை வேதவகுப்பாக, ஞாயிற்றுக்கிழமை காலை ஆராதனையாக, ஞாயிற்றுக்கிழமை இரவு ஆராதனையாக, புதன்கிழமை இரவு ஆராதனையாக அல்லது ஒருவேளை ஒரு சுவிசேஷக் கூட்டம் கூடிவரும் வேளையாக இருக்கலாம் என்றாலும், நாம் அவ்விடத்தில் இருக்க வேண்டாமா?*

*நாம் தனிப்பட்ட வகையில் வேதவாக்கியங்களைப் படிப்பதில் ஈடுபட வேண்டாமா? நமக்கு நாமே நமது வேதாகமத்தைப் படிப்பதில் என்ன ஒரு சந்தோஷம் இருக்க வேண்டும். தேவனுடைய வசனத்தைச் சுயாதீன மாகப் படிப்பதில் நம்மை அர்ப்பணிப்பதினால், நாம் விலகிச்செல்ல வழிநடத்தப்படுதலைத் தவிர்க்கவும் சத்தியத்தை தவறிலிருந்து பிரித்தறிவது எப்படி என்பதை அறியவும் முடியும்.*

*மற்றும், நாம் அப்போஸ்தலருடைய உபதேசத்திற்கு நம்மை அர்ப்பணித்தி ருந்தால், நாம் செய்யும்படிக்கு, அப்போஸ்தலர்கள் மூலமாகக் கர்த்தர் போதிப்பதைச் செய்வதற்கு நம்மால் இயன்ற அளவுக்கு மிகச்சிறப்பாக முயற்சி செய்வோம் (யாக்கோபு 1:22).*

**ஆராதனையில் ஒருமித்து இருத்தல்**

*நடபடிகள் 2:42 வசனம் ஆராதனையின் பல விஷயங்களைப் பற்றிப் பேசுகிறது: "அப்போஸ்தலரின் உபதேசம்" என்பது கூட்டத்தில் வசனத்தைப் பிரசங்கித்தலை உள்ளடக்கி இருக்கும். "அப்பம் பிட்குதல்" என்பது அனேக ம ாகக் கர்த்தருடைய இராப்போஜனத்தைக் குறிப்பிடலாம். "ஜெபம்" என்பது வெளியரங்கமாகச் செய்யப்பட்ட ஜெபமாக இருக்கலாம் என்று முன் அனுமா னம் செய்யப்படுகிறது. "அந்நியோந்நியம்" என்பது, ஆராதனையின் ஒருபகுதி என்ற வகையில் கொடுத்தலைக் குறிப்பிடலாம். மற்றும் ஆராதனையானது பிந்திய வசனப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது (வசனம் 47). சீஷர்கள் "தேவனை துதிப்பதில்" மும்முரமாக இருந்தனர் என்று லூக்கா கூறுகிறார்.*

*ஒரு கிறிஸ்தவராக இருப்பதற்கு, நாம் ஒருமித்து ஆராதிக்க வேண்டும்! நாம் ஒருமித்து ஆராதிப்பதில், வாரத்தின் முதல்நாளில் நாம் கர்த்தருடைய பந்தி யில் பங்கேற்று, நமது வருமானத்தில் இருந்து காணிக்கை கொடுத்து, தேவனு டைய வசனத்தைப் படித்து, பாடி, ஜெபிக்கிறோம். இது, நாம் குறைந்தபட்சம் வாரத்தின் முதல்நாளில் அதாவது வாரம் ஒருமுறையாகிலும் கூட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறது. ஆனால் வேறுவகையில் நமது ஒன்றுகூடுதல்கள் எத்தனை நாட்களுக்கு ஒருமுறை இருக்க வேண்டும் என்பது நமது முடிவைப் பொறுத்த விஷயமாக உள்ளது. எருசலேமில் இருந்த சபையானது தினந்தோறும் கூடிவந்ததாகத் தோன்றுகிறது. அவர்கள் "ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து" என்று நமது வசனப்பகுதி கூறுகிறது (நடபடிகள் 2:46). அவர்கள் "தேவாலயத்திலே அநுதினமும் தரித்தி ருந்து" என்பதை நான், அவர்கள் யூதர்கள் என்ற வகையிலல்ல, ஆனால் கிறிஸ்தவர்கள் என்ற வகையில் ஆராதிப்பதற்காகவே, தேவாலயச் சூழல்களில் ஒன்றுகூடியிருந்தனர் என்ற கருத்தில் எடுத்துக்கொள்கிறேன். இருப்பினும், அவர்கள் அன்றாடம்* ஒன்றுகூடியிருந்தனர் *என்பது ஆராதனை மற்றும்*

அறிவுறுத்தப்படுதல் ஆகியவற்றிற்காகவே என்பது தான் முக்கிய கருத்தாக உள்ளது.

இது இன்றைய நாட்களில் நமக்கு, சபையானது ஒரு முறையான அடிப்படையில் "வாரத்தின் முதல் நாளில்" ஆராதிக்கவும் அறிவுறுத்தல் பெறவும், அத்துடன் கூடுதலாக, நல்ல முடிவு ஒன்று கருத்துத் தெரிவிக்கும் வேறு ஏதாவது காலங்களிலும் *ஒருமித்துக் கூட வேண்டும்* என்று அர்த்தப்படுகிறது. ஆனால் சபையானது ஒருமித்துக் கூட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டு இருந்தால், ஒவ்வொரு முறையும் சபைகூடிவருகிறபோதெல்லாம் ஒவ்வொரு கிறிஸ்தவரும் சாத்தியமான அளவுக்கு அங்கிருக்கும் பொறுப்பைக் கொண்டிருக்கிறார். எபிரெயருக்கு எழுதிய நிருபம் இதைப் பின்வருமாறு விளக்குகிறது:

> மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து; சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும் (எபிரெயர் 10:24, 25).

ஒருவர் கிறிஸ்தவராகும்போது அவரைக் கர்த்தர் சேர்த்துக்கொள்ளுகிற சபையின்றி அவர் ஒரு கிறிஸ்தவராக இருக்க இயலாது. மற்றும் ஒருவர் உண்மையிலேயே சபையுடன் ஒன்றுகூடி வரவில்லை என்றால், அவரால் தம்மை சபையின் ஒரு பாகமாக உண்மையிலேயே நினைத்துப் பார்க்க இயலாது! ஆராதனையில் சபையானது, ஒருமித்து இருத்தலுக்கான தனது மிகவும் அர்த்தம் நிறைந்த தருணங்களில் ஒன்றை அனுபவிக்கிறது; ஒவ்வொரு கிறிஸ்தவரும் அந்த ஒருமித்தலை அனுபவிக்க அங்கிருக்க வேண்டியது அவசியமாகிறது.

**பராமரித்தல் அல்லது உபகாரம் செய்தலில் ஒருமித்து இருத்தல்**

அந்தத் தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள், ஒருவர் பிறர்மீது கவனம் செலுத்தியது பற்றிய பதிவேடு மனதை ஈர்க்கக்கூடியதாக உள்ளது. இங்கு நாம் பின்வருமாறு வாசிக்கிறோம்: "விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள். காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்துகொடுத்தார்கள்" (நடபடிகள் 2:44, 45; மேலும் 4:32-35ஐயும் காணவும்).

புதிய ஏற்பாட்டின்படி, சபையின் உபகாரம் என்பது சக கிறிஸ்தவர்களுக்கு உதவுதலுடன் மட்டுப்படுத்தப்படக்கூடாது, ஆனால் அது சபையின் முதல் பொறுப்பாக உள்ளது (கலாத்தியர் 6:10). நாம் ஒருவர் மற்றவரைப் பராமரிப்பதற்காக ஒருவர் பிறரின்மீது அன்புகூருகிறபோது, நாம் கிறிஸ்துவின் சீஷர்கள் என்பதை நிரூபிக்கிறோம் (யோவான் 13:35).

உறுப்பினர் யாரேனும் ஒரு இடர்ப்பாட்டை அனுபவிக்கும்போது சபையானது எழுதுவதைக் காண்பது எப்போதுமே மெய்சிலிர்க்கச் செய்வதாக உள்ளது: குடும்பத்தில் ஒரு எதிர்பாராத மரணம் ஏற்படுகிறது, மற்றும் சபையார்

கேட்டுக்கொள்ளப்படுவதற்கு முன்பாகவே அங்கு உணவு, நட்புறவு மற்றும் ஆறுதலுடன் *சபையார் அங்கிருக்கின்றனர்.* யாரேனும் ஒருவர் வாகனவிபத்தில் காயப்படுகிறார், மற்றும் *சபையானது அங்கிருக்கிறது.* இரவில் எல்லா மணிவேளைகளிலும், அங்கு அமர்ந்து, குடும்பத்திற்காக ஜெபிக்கின்றனர், ஆறுதல் அளிக்கின்றனர், தேவைகளைச் சந்திக்கின்றனர். உறுப்பினர் ஒருவர் ஒரு அறுவைச் சிகிச்சை பெறுவதற்காக மருத்துவமனைக்குச் செல்கிறார், மற்றும் *சபையானது அங்கிருக்கிறது.* அவரைச் சந்தித்து, அவரது வீட்டிற்கு உணவு கொண்டுவந்து, மலர் களையும் வாழ்த்துக்களையும் அனுப்புகின்றனர் மற்றும் தொலைபேசியில் அழைத்துப் பேசுகின்றனர். மக்கள் ஒரு தீ விபத்தில் தங்கள் உடமைகளை இழந்து போகின்றனர், மற்றும் *சபையானது அங்கிருக்கிறது.* உடனடியாக பணம் உதவிசெய்து, உடைகள், தட்டுமுட்டுச் சாமான்கள் மற்றும் தேவைப்படும் பொருட்கள் ஆகியவற்றைச் சேகரித்து, தற்காலிகமாகத் தங்கும் வசதிகள் அளித்து, குடும்பம் தனது சொந்தக் காலில் நிற்பதற்கு வழிகளைக் கண்டறிகின்றனர். இன்னொரு நாட்டில் இருந்து கிறிஸ்தவர்கள், உலகப்பிரகாரமான தங்கள் உடமை கள் எல்லாவற்றையும் பின்வைத்துவிட்டு அமெரிக்க நாட்டிற்குச் செல்கின்றனர், மற்றும் *சபையானது அங்கிருக்கிறது,* குடிபெயர்ந்த குடும்பமானது தனது புதிய இல்லத்தில் நன்கு நிலைநாட்டப்படும் வரையிலும் அவர்கள் வேலைகளைக் கண்டுகொள்ளவும் ஒரு வீட்டை வாங்கவும் உதவுகிறது, உடனடியான மற்றும் நீண்டகால உதவிகளை அளிக்கிறது. அது நடப்பதை நான் கண்டிருக்கிறேன்! இதுதான் சபை ஒருமித்து இருத்தலின் மிகச்சிறந்த வகையாக உள்ளது!

### ஐக்கியத்தில் ஒருமித்து இருத்தல்

பதிவேடு பின்வருமாறு கூறுகிறது: "விசுவாசிகளெல்லாரும் ஒருமித்தி ருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள். ... அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து வீடுகள் தோறும் அப்பம்பிட்டு, மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி" (நடபடிகள் 2:44, 46). அவர்கள் "ஒன்றுபட்ட ஆராதனைக்கு" தேவாலயச் சூழலில் கூடியிருந்தது மட்டுமின்றி, "வீடுகள் தோறும் அப்பம்பிட்டும்" இருந்தனர். இவ்வசனத்தில் அவர்கள் "அப்பம் பிட்டு" என்பது 42ம் வசனத்தில் உள்ள "அப்பம் பிட்குதலிலும்" என்பதிலிருந்து மாறுபடுகிறது. 42ம் வசனம் ஆராதனையின் சந்தர்ப்பப்பொருளைக் கருத்தாகத் தெரிவிக்கிறது மற்றும் அனேகமாக அது கர்த்தருடைய பந்தியைக் குறிப்பிடுவதாக இருக்கலாம். 45ம் வசனம் ஐக்கியத்தின் சந்தர்ப்பப் பொருளைக் கருத்தாகத் தெரிவிக்கிறது மற்றும் இது அவர்கள் ஒருவர் மற்றவருடைய இல்லங்களில் உணவு உண்பதைக் குறிப்பிடுவதாக இருக்க வேண்டும். அவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் மாத்திரம் அல்ல, ஆனால் தினந்தோறும் ஒருமித்து இருந்தனர் என்பதே கருத்தாக உள்ளது; அவர்கள் வெளியரங்கமாக ஆராதனை செய்த இடத்தில் மாத்திரமல்ல, ஆனால் தங்கள் இல்லங்களில் ஒருமித்து இருந்தனர்; மற்றும் அவர்கள் ஆராதனைக்காக மாத்திரமல்ல, ஆனால் ஐக்கியத்திற்காகவும் ஒருமித்து இருந்தனர்.

புதிய ஏற்பாட்டு சபையின் ஏதாவது ஒரு பண்பை நாம் புறக்கணித்தி ருக்கிறோம் என்றால், அது ஐக்கியத்தில் இந்த ஒருமித்திருத்தல் என்பதாகவே இருக்கிறது. சபைக் கட்டிடத்தில் ஞாயிற்றுக்கிழமை அன்று ஆராதிக்க நாம் ஒருமித்து இருந்தால், தேவைப்படுகிற ஒருமித்திருத்தலின் வகைக்கு அதுவே

*நமக்குப் போதுமானது என்று நாம் உணர்வதாகக் காணப்படுகிறது. ஆனால் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்கள் தினந்தோறும் ஒன்றுகூடிவந்தனர். அவர்கள் ஒன்றுகூடி உணவு உண்டனர் என்பது நினைவில் வைக்கப்பட வேண்டியதாக உள்ளது. உண்மையில், ஒன்றுகூடி உண்ணும் இந்த நிகழ்வு, விசுவாசத்தில் விலகிச் சென்ற ஒருவருடன் உணவு உண்பதை விசேஷமாக மறுத்தல் என்பது அவரை ஐக்கியத்தில் இருந்து நீக்குவதாகும் என்று நினைக்கும் அளவுக்கு, மிக முறையானதாகவும் மிக முக்கியமானதாகவும் இருந்தது (1 கொரிந்தியர் 5:11).*

*ஆராதனைக்கான வேளைகளுக்குப் புறம்பே ஒருமித்திருத்தல் ... நமது இல்லங்களில் ஒன்றுகூடிச் சந்தித்தல் ... ஒன்றாக உணவருந்துதல் ... இவைகள் நமது ஒருமிப்பின் அடையாளமாகவும் அதற்குக் காரணமாகவும் உள்ளன. இந்த புதிய ஏற்பாட்டு நடைமுறையை மீளக்கட்டுவதற்கும் நாம் முயற்சி எடுக்க வேண்டும் என்பது அவசியமாகும்!*

**எண்ணப்போக்கில் ஒருமித்து இருத்தல்**

*"மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள்" என்று லூக்கா நமக்குக் கூறுகிறார் (நடபடிகள் 2:46, 47). அவர்கள் சந்தோஷம் மற்றும் பெருந்தன்மை என்பவற்றில் ஒரே எண்ணப்போக்குகளைப் பகிர்ந்து கொண்டனர். சபையில், எல்லா உறுப்பினர்களாலும் இப்படிப்பட்ட எண்ணப்போக்குகள் எப்போதும் பற்றிக்கொள்ளப்பட்டு இருக்க வேண்டும். அவர்கள் அப்படி இருந்தால், அதிகம் அதிகமான மக்கள் சபையை நோக்கிக் கவரப்படுவார்கள். அப்போது போன்றே, இப்போது நாம் சந்தோஷத்தையும் பெருந்தன்மையையும் செயல்விளக்கப்படுத்தினால், சபையானது "ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருக்கும்." இன்னொரு புறத்தில், நாம் எப்போதும் முறையிடுபவர்களாகவும் சண்டையிடுபவர்களாகவும் இருந்தால் மக்களை நமது ஐக்கியத்திற்குள் கவருவதற்கு மாறாக, நாம் அவர்கள் விலகியோடச் செய்பவர்களாயிருப்போம். தனிப்பட்ட வகையிலும் ஒருங்கிணைந்த வகையிலும் நமது எண்ணப்போக்குகள், மற்றவர்கள் நம்மைக் காணும் வழியில் எல்லா வேறுபாடுகளையும் ஏற்படுத்துகின்றன.*

## அந்த ஒருமித்து இருத்தலின் விளைவுகள்

*நடபடிகள் 2:46, 47ஐக் கவனியுங்கள். சீஷர்கள், "ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். மற்றும் இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார்." சபை தினந்தோறும் வளர்ந்தது!*

*இது, குறைந்தபட்சம் ஒருபகுதியாவது சபைக்குள்ளாக இருந்த ஒருமித்து இருத்தலின் விளைவாக இருந்தது என்பதில் சந்தேகம் இல்லை. அப்போது போன்றே இப்போதும், மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல! இவ்வாறாக, தனிநபர்கள் எப்போதுமே தாங்கள் அன்புகூருவதற்கும் அன்புகூரப்படுவதற்குமான இடம் ஒன்றைத் தேடுகின்றனர். ஒருமித்து இருத்தலை சபையில் அவர்கள் காணும்போது, அதன் அங்கமாக இருக்க அவர்கள் விரும்புகின்றனர். எனவே சபை உறுப்பினர்கள் கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியைப் பரப்பி மற்றவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கையில், அவர்களின் நண்பர்களும்*

அயலகத்தவர்களும் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து, இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். *ஆனால் சபையின் உறுப்பினர்களுக்கு மத்தியில் இருந்த ஒருமித்து இருத்தலை அவர்கள் கண்ட காரணத்தினாலேயே, அவர்கள் சபையை நோக்கி இழுக்கப்பட்டு அதன் செய்தியினால் தூண்டப்பட்டு அதற்கு சாதகமான கவனத்தைக் கொடுத்தனர்.*

இன்றைய நாட்களில், சமூகத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள மக்கள் திரண்ட எண்ணிக்கையில் இருக்கும் உலகம் ஒன்றில் நாம் வாழ்கிறோம் ... இதில் அவர்கள் வெறும் எண்களாக மாத்திரம் மதிக்கப்படுகின்றனர் ... இதில் தனிமை பெருத்துள்ளது. இப்படிப்பட்ட ஒரு உலகத்தில், மக்கள் உண்மை யான ஒருமித்து இருத்தலைக் கண்டறியக்கூடிய ஒரே ஐக்கியத்தை நோக்கி இழுக்கப்படுகின்றனர்! அவர்கள் மனம்மாற்றப்படுவார்கள், மற்றும் சபையானது வளர்ச்சியடையும்! ஒருவேளை முதல் நூற்றாண்டில் இருந்த கிறிஸ்துவின் சபையில் மக்கள் கண்ட ஐக்கியத்தின் வகையை, நாம் இந்த உலகத்திற்குக் காட்சிப்படுத்தாமல் இருப்பதே, சபை நாம் விரும்புகிற அளவுக்கு வளராதி ருப்பதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

## முடிவுரை

“ஒருமித்து இருத்தல்” என்பது இன்றைய நாட்களில் நமது உலகத்தில் பிடிபடாத ஒரு கொள்கை என்பதாக நிலைத்திருக்கிறது. ஆனால் சபையில் இது ஒரு உறுதியான உண்மை நிலையாகிறது. நமது தேவன் நம்மை அவருடன் ஒன்றாக்கும்போது, நாம் ஒருவர் பிறருடன் ஒன்றாயிருப்பதையும் அவர் நமக்குச் சாத்தியமாக்குகிறார். யோவான் இதைப் பின்வருமாறு இட்டார்: “அவர் ஒளியிலிருக்கிறதுபோல, நாமும் ஒளியிலே நடந்தால், *ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம், ...*” (1 யோவான் 1:7; என்னால் வலியுறுத்தப்படுகிறது). ஒருவர் மற்றவருடனான உண்மையான ஐக்கியம் அல்லது ஒருமித்து இருத்தல் என்பது இயேசுகிறிஸ்துவுக்குள் மற்றும் அவர் மூலமாக மாத்திரமே சாத்தியமா கிறது மற்றும் அது அவருடைய சபையில் மாத்திரமே காணப்பட முடியும்.